பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 29 சனிக்கிழமை 14.09.2024 கதிர் 311

# ரணிலும் அநுரவும் அரசியல் திருமணம் இப்போது தேன்நிலவு கொண்டாட்டத்தில்

## அதை நிறுத்தவேண்டும் என சீறுகிறார் சஜித்

ரணிலும் அநுரவும் அரசியல் திருமணம் செய்துகொண்டு தேன்நிலவு கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த தேனிலவுக் கொண்டாட்டத்தை நிறுத்த வேண்டும்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 49ஆவது கூட்டம் நேற்று தெபரவெள நகரில் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்பொழுது வன்முறையும் மிலேச்சத்தனமும் பயங்கரவாதமும் தலை தூக்கிக் கொண்டிருக்கின்றது. ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஒரு கட்சியின் தலைவராக வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டவர், இந்த ஜனாதிபதித் தேர்தலுடன் கட்சியைவிட்டு வெளியேறவேண்டிய நிலைக்கு அல்லது கட்சியைவிட்டு துரத்தியடிக்கப்படக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை ☞ 2

## வாக்குச்சீட்டு விநியோகம் இன்றுடன் நிறைவு

### கிடைக்காதோர் தபாலகத்தை நாடவும்

ஜனாதிபதித் தேர்தல் வாக்கு சீட்டு விநியோக பணிகள் இன்றுடன் நிறைவடையும். வாக்குச்சீட்டுக்கள் கிடைக்காதவர்கள் தமது வசிப்பிடப் பிரதேசத்தில் உள்ள தபால் நிலையத்துக்கு சென்று தமது விவரங்களை உறுதிப்படுத்தி வாக்குச்சீட்டினை பெற்றுக்கொள்ள முடியும் என தபால் திணைக்களத்தின் ☞ 8

## புலமைப்பரிசில் பரீட்சை ஏற்பாடுகள் அனைத்தும் தயார்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள பரீட்சைத் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகசந்திப்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இதனை உறுதிப்படுத்தினார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நாளை நடைபெறவுள்ளது. இதில் இம்முறை ☞ 8

## செப். 18 நள்ளிரவுடன் பரப்புரைகள் நிறைவு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அனைத்து பரப்புரை நடவடிக்கைகளும் எதிர்வரும் 18ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுபெற வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன் பிறகு, எந்தவொரு தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளையும் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, பொது அல்லது தனியார் வாகனங்களில் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஒட்டப்பட்டுள்ள ஸ்டிக்கர்கள் மற்றும் துண்டுபிரசுரங்கள் போன்றவற்றை ☞ 8




## இரண்டு ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் வடமாகாணத்தில் நேற்று பெயரிடப்பட்டன

வடக்கு மாகாணத்தில் ஸ்தாபிக்க திட்டமிடப்பட்டுள்ள மூன்று ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் இரண்டு வலயங்கள் நேற்று உத்தியோகபூர்வமாக பெயரிடப்பட்டன. யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மற்றும் கிளிநொச்சி பரந்தன் ஆகிய ஏற்றுமதி செயலாக்க வலயங்களே இன்று பெயரிடப்பட்டன .

இந்நிகழ்வுகளில் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ்,, முதலீட்டு ஊகுவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம, மற்றும் அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துக்கொண்டு கொண்டனர்.

இரண்டு ஏற்றுமதி ☞ 8

## போலித் தகவல்கள்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக பரப்பப்பட்டுவரும் போலியான தகவல்கள் குறித்து தேர்தல் ஆணைக்குழு முக்கிய அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் நம்பகத்தன்மையுடனும் நடத்துவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே செய்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு இவ்விடயத்தில் நியதிச்சட்ட ரீதியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த சுற்றறிக்கைகளையும் அறிவுறுத்தல்களையும் பணிப்புகளையும் வெளியிட்டுள்ளதோடு அது ☞ 8

## குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் மீது பாய்கின்றது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

### உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் நேற்று அனுமதி

ஆட்சியாளர்கள் சமீபத்தில் அறிமுகப்படுத்திய விசா அனுமதி நடைமுறையை இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறிய குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்வதற்கு உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது. அவருக்கு எதிரான குற்றப் பத்திரிக்கையைத் தாக்கல் செய்யவும் உத்தரவிட்டது.

நீதிமன்றத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்தாமல் கட்டுப்பாட்டாளர் நீதிமன்றை அவமதிக்கிறார் என்பதை இரண்டு சாட்சிகளின் மூலமாக உயர்நீதிமன்ற சட்டத்தரணி, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நேற்று மன்றுக்கு ☞ 8

## திலீபனின் நினைவேந்தலை தடுக்கப் பொலிஸார் முயற்சி

### நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து தமிழ் மக்களுக்காகப் பட்டினிப் போராட்டம் நடத்தி உயிர்த் தியாகம் செய்த தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தில் நடத்தத் தடைவிதிக்கக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

தியாக தீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நாளை செப். 15 தொடங்குகின்றன. செப். 26 வரையில் இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவரும் நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தத் தடை விதிக்கக் கோரி யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை மனுத் ☞ 8

## தேசப்பற்றுள்ள முன்னணியின் கூட்டம் மீது கொழும்பில் தாக்கு

### ஜேவிபி ஆதரவாளர்கள் மீது குற்றச்சாட்டு

தேசப்பற்றுள்ள தேசிய முன்னணியினால் நேற்றுப் பிற்பகல் கொழும்பு 7, தேசிய நூலக ஆவணச் சேவை சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மாநாட்டின்போது வாள்கள் மற்றும் தடிகளால் ஒரு குழுவினர் அங்கிருந்தவர்களைத் தாக்கிவிட்டு, மோட்டார் சைக்கிள்களில் தப்பிச் சென்றுள்ளனர். ☞ 8

## வாகன இறக்குமதித் தடையை நீக்க அமைச்சரவை தீர்மானம்

304 எச்.எஸ். (HS) குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் இயந்திரம் சாரா வாகன உதிரிப் பாகங்கள் இறக்குமதி மீதான தற்காலிக தடையை நீக்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்துடன் கூடிய நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார மீட்பு செயல்முறைக்கு இணங்க, நிதி அமைச்சின் பரிந்துரைகளுக்கு உட்பட்டு, 2024 ஒக்டோபர் 01 முதல் மூன்று கட்டங்களாக இந்தத் தடை நீக்கப்படும்.

இந்நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு மீது ஏற்பட்டிருந்த அழுத்தத்தை முகாமைத்துவம் செய்ய 2020 மார்ச் மாதத்தில் முதன் முதலில் இந்தத் தடை விதிக்கப்பட்டது. மருந்துகள், எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை நிர்வகிப்பதற்காக இவ்வாறு அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், பொருளாதார மீட்சி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் கீழ் ☞ 8

## பொருளாதாரத்தை விரிவாக்க தே.ம.ச. நடவடிக்கை எடுக்கும்

### அனுரகுமார திட்டவட்டம்

நாட்டின் பொருளாதாரத்தை விரிவாக்கத் தமது ஆளும்தரப்பின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கண்டி, மஹியாவ பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனை அவர், மேலும் குறிப்பிடுகையில்,

பொருளாதாரம் வரம்பில் சிக்கியுள்ளது. ஏன் இவர்களுக்கு ☞ 8

## இனி இது .....

பரிதாபம்தான். இந்த நிலையை அவரேதான் ஏற்படுத்திக்கொண்டார். தன்னை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்து அனுப்புவதற்கான வாக்குகளை கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் பெற்றாலும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் பணத்திற்காக அவர்கள் சொல்வதைக் கேட்டு நடந்ததன் காரணமாக அந்தத் தலைவருக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அப்படிக் கட்சியைவிட்டுத் தானாக வெளியேறினாலோ அல்லது வெளியேற்றப்பட்டாலோ அரசியலில் அடுத்த நகர்வு என்ன என்பது குறித்து அந்தத் தலைவர் இப்போதே ஆராயத் தொடங்கிவிட்டார், வாய்ப்புக்களைத் தேடத் தொடங்கிவிட்டார் என்று தெரிகின்றது. அவர் இருக்கும் கட்சியைவிட்டு அவர் முதலில் வெளியேறினால் தமது கட்சியில் அவருக்கு தலைமைப் பதவியைத் தரத் தயார் என்று ஒரு முன்னணி முதலில் தெரிவித்திருந்தது. இப்போது மற்றொரு கூட்டணியும் அத்தகைய வாய்ப்பை வழங்கி-ள்ளது என்று தெரிகிறது.

இது தொடர்பில் மட்டக்களப்பில் இரகசியச் சந்திப்பு ஒன்றும் ஓரிரு தினங்களுக்கு முன்னர் நடந்திருப்பதாகக் கேள்வி. இருந்தாலும் அது எப்படியோ ஊடகம் ஒன்றுக்குக் கசிந்துவிட்டது. ஆனால் அங்கு பேசப்பட்ட விடயத்தை விட்டுவிட்டு வேறு ஏதோ விடயங்களைக் கூறிச் சமாளித்துவிட்டார்கள்.

அந்த நாடாளுமன்ற உறுப்பினர் அவர் இருக்கும் கட்சியைவிட்டு வெளியேற்றப்பட்ட பின்னர் தமது கட்சித் தலைமையைப் பெறுவது தொடர்பிலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது என்று தெரிகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமன்றி அவருக்குப் பின்னால் நிற்கும் ஒருசிலரும் சேர்ந்தே காட்சி தாவுவதற்கான வாய்ப்புக்கள், சாத்தியங்கள் குறித்து ஆராயப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினரையும் மற்றவர்களையும் தமது கட்சிக்கு வருமாறு அழைக்கும் அந்தக் கட்சியின் புதிய தலைவரின் முயற்சி அதன் பெருந்தலைவருக்கு ஏற்புடையதாக இல்லை என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள். ஆகமொத்தத்தில் அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட நிலமைதானோ தெரியாது அந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கும் ஆதராவளர்களுக்கும்.

.....................

தமிழ் அரசுக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் உபகுழுவைச் சேர்ந்த 6 பேரில் 5 பேர் வவுனியாவில் செப்டெம்பர் 10 கூடிப் பேசியது என்னவோ ஆனால், வெளியே வந்து கட்சித் தலைவர் மாவை சேனாதிராசவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் அந்த முடிவைத் திரிபுபடுத்தும் வகையில் அல்லது மக்கள் அதனைத் தவறாகப் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று செப். 11 இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்று கட்சியின் மத்திய செயற்குழு ஏற்கனவே செப்டெம்பர் முதலாம் திகதி எடுத்த முடிவின் அடிப்படையில் அவரிடமிருந்து கட்சிக்குச் சில வாக்குறுதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை எடுப்பதுடன், சஜித்தை ஆதரிப்பதற்கான காரணங்களை விளக்கி மக்களுக்கு ஒரு அறிக்கையை விடுப்பது என்பதே அந்த ஐவர் குழு கூடி எடுத்த முடிவு. ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு என்று மீளாய்வு செய்யப்பட்டதைப் போன்றும் அதே குழு மீண்டும் செப். 14, 15 கூடி ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று இறுதி செய்யும் என்ற சாரப்பட மாவையரும் சிறீதரனும் ஊடகங்களுக்குத் தகவல் தெரிவித்திருந்தனர்.

இவர்களின் இந்தத் திரிபுபடுத்தல்களால் மக்களிடம் ஏற்பட்ட குழப்பத்தைத் தொடர்ந்து செப். 10 கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவைத் தெளிவுபடுத்தி கட்சியின் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் வியாழக்கிழமை ஓர் அறிக்கை விடுத்திருந்தார். அதுபோன்று கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான சிவிகே சிவஞானமும் ஊடகவியலாளர்களிடம் கூட்ட முடிவுகள் குறித்து விளக்கமளித்திருந்தார். இந்த நகர்வுகளுக்குப் பின்னர் கருத்துக்களைத் திரித்த இருவரும் இப்போது 'கப் சிப்' என்று அடங்கிவிட்டனர். அதேநேரம் மாவையர் கூறியதைப் போன்று இன்று அல்லது நாளை அப்படி ஒரு கூட்டம் நடப்பதற்கான ஏதுநிலை எதனையும் காணவில்லை. இந்தக் குழு மீண்டும் செப். 16 அன்றே கூடும் என்பதையும் கட்சியின் செயலாளர் தனது அறிக்கையில் தெளிவுபடுத்தியிருந்தார்.

அப்பப்பாருங்கோவன் என்னென்ன "கம்பி கட்டுற கதையெல்லாம்" சொல்லுறாங்கள் எண்டு.

................

தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மற்றும் அந்தக் கட்சியின் கிழக்கு மாகாண முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் உள்ளிட்ட குழுவினரை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்போதைய தலைவர் அருண் தம்பி-முத்து தலைமையிலான குழுவினர் கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு, வந்தாறுமூலையில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

யோகன்பாதரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. கிழக்கு மாகாணத்தில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்துப் பரப்புரை மேற்கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டதாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அருண் தம்பிமுத்து தெரிவித்திருக்கிறார்.

அரியநேத்திரன் பற்றிப் பேசுவதாயின் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினருடன் அல்லது தமிழ் மக்கள் பொதுச்சபையினருடன் பேச்சு நடத்தியிருக்கவேண்டும். அதுவும் அந்தக் கட்டமைப்புக்களின் கிழக்குத் தலைவர்களுடன் பேசியிருக்கவேண்டும். தமிழ் அரசுக் கட்சியினருடன் அது பற்றி என்ன பேசக்கிடக்கின்றது என்பதை அருண் தம்பிமுத்துத் தெரிவிக்கவில்லை. அரியத்தாரை ஆதரிப்பதாக சிறீதரன் சொல்லியிருக்கிறார் என்றாலும் கட்சி அதற்கெதிராக முடிவெடுத்திருக்கும் நிலையில் அவர் கட்சியின் முடிவுக்கு எதிராகச் சென்று அரியத்தாருக்கு ஆதரவாகப் பரப்புரை செய்வதற்கு இன்னும் முன்வரவில்லை. அப்படிச் செய்தால் அதன் பின்னர் கட்சியில் தான் இருக்க முடியாது என்கிற அச்சம் அதற்குக் காரணமாக இருக்கக்கூடும். இந்த நிலையில் இந்த இரு தரப்பினரும் என்ன பேசினர் என்கிற உண்மை விவரங்கள் விரைவில் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

.....................

ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரன் நேற்று யாழ்ப்பாணத்தில் ஒரு செய்தியாளர்கள் சந்திப்பில் அதற்கு முதல்நாள் மட்டக்களப்பில் சொன்னதையே திரும்பவும் சொல்லியிருக்கிறார். அதாவது, அடுத்துவரும் சில நாள்களில் தன்னைப் பற்றி போலியான துண்டறிக்கைகள், காணொலிகள் வெளியிடப்படலாம் என்றும் தான் தேர்தலில் இருந்து விலகி சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவளிப்பதாகக்கூட வதந்திகள் பரப்பப்படலாம் என்றும் அச்சம் வெளியிட்டார்.

அதுமட்டுமல்ல, தனக்கு வாக்களிக்கும் எவரும் இரண்டாவது, மூன்றாவது விருப்பு வாக்குகளைப் போடவேண்டாம் என்றும் வருந்திக் கேட்டுக்கொண்டார். தனக்கு வாக்குப்போடுபவர்கள் வேறுயாருக்கும் தமது விருப்பு வாக்குகளைப் போடலாம் என்று யார் சொன்னாலும் நம்பவேண்டாம் என்றும் தனக்கு மட்டுமே வாக்களிக்குமாறும் கேட்டுக்கொண்டார். அதுதான் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பினரின் நிலைப்பாடு என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

அதே பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோவின் செயலாளர் ஜனா எனப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் கருணாகரம், அரியத்தாருக்கு வாக்களிப்பவர்கள் தமது இரண்டாவது விருப்பு வாக்கை ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகப் போடலாம் என்ற சாரப்படப் பேசியதற்கான பதிலாகவே அரியத்தாரின் செய்தியாளர் சந்திப்பு இருந்ததாக நம்பப்படுகின்றது. என்றாலும் "ஒற்றுமை" குலைந்துவிடும் என்ற காரணத்தால் அவர் ஜனாவின் பெயரைத் தப்பித் தவறிக்கூட உச்சரிக்கவில்லை.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## ரணிலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற வன்முறை காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கின்றது. பல சமூக அமைப்புக்களின் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் இடம் பெற்றிருக்கின்றது.

இந்த நாட்டில் கருத்துச் சுதந்திரமும், தாம் விரும்பிய முறையில் அரசியல் செய்யவும் சுதந்திரம் இருக்கின்றது. இங்கு உருவெடுக்கின்ற கொடிய பாசிசவாதத்திற்கும், வன்முறைக்கும், மிலேச்சத்தனத்திற்கும் மக்கள் ஆதரவு அளிக்கின்றார்களா என்று கேள்வி எழுப்புகின்றோம். பொது மக்களின் யுகத்திற்காக எந்தச் சந்தேகமும் இன்றி ஐக்கிய மக்கள் சக்திக்கு உந்து சக்தியைப் பெற்று

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# தனிநபர் வரிகளை திருத்த அமைச்சரவை அனுமதி

வரி செலுத்துவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஆளும்தரப்பின் வேலைத்திட்டத்தின் கீழ், 2025 ஏப்ரல் மாதம் முதல் தனிநபர் வருமான வரி கட்டமைப்பில் திருத்தங்களைச் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வரிச் சீர்திருத்தங்களால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் அதேவேளையில், நிதிப் பொறுப்பைப் பேணுவதே இந்த வரிக் கட்டமைப்பு மாற்றங்களின் நோக்கமாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து, தனிநபர் வருமான வரிக் கட்டமைப்பில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள், அமைச்சரவைப் பத்திரம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2022ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வரிச் சீர்திருத்தங்கள், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான ஒரு பரந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாகவே வரி அறிவிடுவது கையாளப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடனான நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் (நுகுகு) வேலைத்திட்டத்தின் கீழ், 2025ஆம் ஆண்டின் இறுதிக்குள் மொத்தத் தேசிய உற்பத்தியில் 2.3% ஆன முதன்மை வரவு செலவுத் திட்ட மேலதிகத்தை அடைவதற்கு இலங்கை உறுதிபூண்டுள்ளது. இந்த இலக்கை அடைவதற்கு 2025 ஆம் ஆண்டளவில் அரச வருமானத்தை மொத்தத் தேசிய உற்பத்தியில் 14% ஆக உயர்த்த கணிசமான வரி வருவானம் தேவைப்படும்.

அடிப்படை சீர்திருத்தங்களில் ஆண்டுக்கு தலா 1.2 மில்லியன் ரூபா வரி இல்லாத வரம்பு, தலா ரூ. 500,000 வரி இடைவெளி என்பன அறிமுகப்படுத்தப்படவுள்ளன. வரி விகிதம் குறைந்தபட்சம் 6% ஆகவும் அதிகபட்சம் 36% ஆகவும் இருக்கும். எவ்வாறாயினும், குறிப்பாக நடுத்தர வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கான கோரிக்கைகளின் அடிப்படையில், இலங்கை தனது நிதி இலக்குகளை அடையத் தொடங்கிய 2024ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சு நடத்த ஆளும்தரப்பு முடிவு செய்தது.

அதன்படி, வரி அளவை 500,000 ரூபாவில் இருந்து 720,000 ரூபாவாக உயர்த்தவும், வரி இல்லாத வரம்பை 1.2 மில்லியனாக வைத்திருக்கவும், அதிகபட்ச வரி விகிதம் 36% உட்பட அனைத்து மட்டங்களிலும் விளிம்பு வரி விகிதங்களைப் பராமரிக்கவும் ஆளும்தரப்பு முன்மொழிந்துள்ளது.

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமானச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ததைத் தொடர்ந்து, 2025 ஏப்ரல் மாதம் முதல் புதிய வரி அமுலாக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

அதிக வரிச்சுமையைக் கொண்ட வரி வரம்புகளுக்கு மத்தியில் உள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க இந்த வரிச் சீர்திருத்தத்தின் மூலம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, மாதத்திற்கு ரூ.150,000 வருமானம் பெறும் ஒரு நபர் 14% வரிக் குறைப்பைப் பெறுவார், அதே சமயம் அதிக வருமானம் ஈட்டுபவர்களுக்கு இன்னும் வரையறுக்கப்பட்ட நிவாரணம் கிடைக்கும்.

இந்த சீர்செய்தலின் ஊடாக இந்நாட்டின் மொத்த வருமானத்தில் ஏற்படும் தாக்கம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 0.07% என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டில் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கருத்திற்கொண்டு இந்த நிவாரணத்தைக வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த உத்தேச திருத்தங்கள் நிதி ஒழுக்கத்தை பேணுவதற்கான தேவையையும் குறிப்பாக நடுத்தர வருமானம் ஈட்டுவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கான மக்களின் கோரிக்கையையும் நிறைவேற்றும் என்று நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

# பெருந்தோட்ட தொழிலாளர் அடிப்படைச் சம்பளம் ரூ. 1350

## வர்த்தமானி வெளியீடு

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1350 ரூபா அடிப்படை சம்பளத்தை நிர்ணயித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.பி.ஏ.விமலவீரவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தல் செப்டெம்பர் 10 முதல் அமுலாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள சபைகள் கட்டளை சட்டத்தின் 30ஆம் பிரிவின் கீழ் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய நாளாந்த குறைந்தபட்ச அடிப்படை சம்பளம் 1350 ரூபாவாகவும், மேலதிகமாகப் பறிக்கும் ஒவ்வொரு கிலோ தேயிலைக்கும் தலா 50 ரூபா மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1350 ரூபா ஆகக்குறைந்த நாளாந்த அடிப்படைச் சம்பளமானது நாளாந்த வரவு-செலவு திட்ட நிவாரணப்படியை உள்ளடக்குகின்றது என்பதுடன் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி கொடுப்பனவுக்கும் ஏற்புடையதாகும் என குறித்த வர்த்தமானியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேட்பாளருக்கு எச்சரிக்கை

மாத்தறை-தங்காலை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பல பரப்புரைக் கூட்டங்களில் கலந்துகொண்ட ஜனாதிபதி வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரேமசிறி மானகேவிற்கு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இனிமேல் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் மற்றுமொரு வேட்பாளரின் கூட்டத்தில் பங்கேற்பது தேர்தல் சட்டத்தின் கீழ் குற்றமில்லையென்றாலும், நெறிமுறைகளை மீறிய குற்றத்திற்காக அவர் மீது குற்றம் சுமத்த முடியும் என அந்த அதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணையில், மக்கள் முன்வைத்த கோரிக்கைகளை கருத்திற்கொண்டுதான் அந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டதாக பேமசிறி மானகே தெரிவித்துள்ளார்.

நான் மக்களுக்கு ஒரு கருத்தை தெரிவிப்பதற்காக அந்த கூட்டங்களில் கலந்துகொண்டார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். பேமசிறி மானகே 2004 - 2010 காலப்பகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் அரசியல் கைதிகள் 30 ஆண்டுகளாக பழி தீர்ப்பதற்காகவே சிறையிலடைப்பா?

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு கேள்வி




பழிதீர்ப்பதற்கு தமிழரசியல் கைதிகளை 30 ஆண்டுகள் இலங்கை அரசாங்கம் சிறையில் வைத்திருக்கிறதா...? குரலற்றவர்களின் குரல் அமைப்பு கேள்வி அரசும் அதன் அதிகாரமும்தான்

எமது தமிழ் அரசியல் கைதிகளை பழிதீர்க்கும் போக்கில் 30 ஆண்டுகளாக சிறைக்குள் தடுத்து வைத்துக்கொண்டிருக்கின்றதாளனகுரலற்றவர்களின் குரல் அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

தேசியசிறைக்கைதிகள்தினமானவியாழக்கிழமை யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அமைப்பினர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

ஜனநாயகப்பெயர்கொண்டமைந்துள்ளஇலங்கை நாட்டில் 116 ஆவது தேசிய சிறைக்கைதிகள் தின நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சுமார் 13 ஆயிரம் கைதிகளை மாத்திரமே தடுத்து வைத்திருக்கக்கூடிய இட வசதியினைக் கொண்ட சிறைக்கூடங்களுக்குள் 24 ஆயிரம் கைதிகளை திணித்து அடைத்து வைத்துக்கொண்டிருக்கின்ற நிலையிலேயே சிறைத்துறை இந்த கைதிகள் தின நிகழ்வை கடைபிடித்துவருகிறதென்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இருப்பினும்உணவு, நீர், சுகாதாரம் மற்றும் மருத்துவம் போன்ற அடிப்படைகட்டமைப்புகள் போதுமற்ற நிலையில் பெயருக்காக கொண்டாடப்படுகின்றதா இந்த தேசிய சிறைக்கைதிகள் தினம் என்கின்ற கேள்வி எழுகிறது.

இத்தனைமோசமான கட்டமைப்பை கொண்டியங்கும் சிறைக்குள்ளேயேசமூகத்தைநேசித்த எமது தமிழ் அரசியல் கைதிகள்30ஆண்டுகளாக வாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது எத்தனை கொடூரமானது!

'எமதுநாடுஜனநாயக நாடு. நாம் கருணை அன்புமிக்கதொருபாரம்பரிய சமூக சமயத்தை சார்ந்தவர்கள். மறப்போம் மன்னிப்போம் என்பது எமது கொள்கையில் ஓர் அங்கம்' என மேடை முழக்கம் செய்கின்ற அரசும் அதன்அதிகாரமும்தான் எமது தமிழ் அரசியல் கைதிகளை பழிதீர்க்கும் போக்கில் 30 ஆண்டுகளாக சிறைக்குள் தடுத்துவைத்துக்கொண்டிருக்கிறதா எனக் கேட்கின்றோம்.

இன்று தேர்தல் பரப்புரைகளாலும் எண்ணற்ற வாக்குறுதிகளாலும், நாடு நிரம்பித் ததும்பிக்கொண்டிருக்கிறது. ஆனபோதிலும், தமிழினத்தின் பெயரில் மூன்று தசாப்த காலங்களாக சிறையில் கொடுமை அனுபவித்துவரும் எமது தமிழ் அரசியல் கைதிகளின் நரக வாழ்க்கைக்கான முற்றுப்புள்ளியின் எல்லை இதுவரை தெரியவில்லை.

உண்மையிலேயேஒருஜனநாயகநாட்டினுடைய சட்டங்களை அமுல்படுத்துகின்ற நீதித்துறையும் அதற்கு ஒப்ப இயங்குகின்ற சிறைத்துறையும் அரச இயந்திரத்தின் முக்கிய இரு பிரிவுகளாகும்.

இவை குற்றம் காணும் குடிமக்களை சீர்திருத்தி, குறிப்பிட்டதொரு காலத்துக்குள் மீண்டும் அவர்கள் சமூகத்துடன் சேர்ந்து வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் பொறுப்புக்குரிய நிறுவனங்களாகும்.

ஆனாலும், தமிழ் அரசியல் கைதிகளுடைய விடுதலைவிடயத்திலேஅரசும்அதன்இயந்திரங்களும் மாற்றான் தாய் மனப்போக்குடன் நடந்துகொள்வதன் நோக்கம் என்ன?

காலம் காலமாக கதிரையேறும் சிங்கள ஆட்சி அதிகாரங்கள், தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குச் சூரையாடும் கலாசாரத்துக்கு இனிமேலாவது முற்றுப்புள்ளியிட வேண்டும். மக்களினதும் சர்வதேசத்தினதும் பார்வைக் கோணங்களை திசை மாற்றும் கைங்கரியத்தை கைவிட வேண்டும்.

நிச்சயமாக இதற்கு மேலும், கால வீணடிப்புச் செய்யாமல் தமிழ் மக்களின் தீர்க்கப்பட வேண்டிய அவசர அடிப்படை விடயங்களுக்கு தீர்வினைக் கூற வேண்டும்.

குறிப்பாக, இனத்தின் பெயரில் நாளுக்கு நாள் வஞ்சிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் 10 தமிழ் அரசியல் கைதிகளினதும் விடுதலை விடயத்தில், அரசின் உண்மையானஇறுதிநிலைப்பாட்டைபொதுவெளியில் தெரிவிக்க வேண்டும் என்பதை 'குரலற்றவர்களின் குரல்' மனிதநேய அமைப்பினராகிய நாம், இந்த ஆண்டு தேசிய சிறைக்கைதிகள் தின பகிரங்க கோரிக்கையாக முன்வைக்கின்றோம்.

அவ்வாறில்லையேல், இந்த நாட்டின் ஆட்சி அதிகாரங்களுக்கும் அதற்குத் துணை செய்யும் குடி மக்களுக்கும், தமிழினத்தின் சாபக் கேடு என்பது தவிர்த்தொதுக்க முடியாத ஒரு காலத்தின் நியதியாகும் என்பதை நினைவூட்ட கடமைப்படுகின்றோம் என குரலற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த ஊடக சந்திப்பில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் முருகையா கோமகன், அரசியல் கைதியான பார்த்தீபனின் சகோதரி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (05)

# போலி எரிவாயு வரிசையை உருவாக்கி காணொளி எடுக்க முயன்றவர் கைது

கண்டி, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் எண்ணெய் மற்றும் எரிவாயு கொள்வனவு செய்வதற்காக மக்கள் வரிசையாக நிற்பது போன்று போலியான வரிசை ஒன்றை உருவாக்கி அதனை காணொளியாக எடுக்க முயன்றவர்களை தடுப்பதற்கு தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகளும் பொலிஸாரும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

திகன பிரதேசத்திலுள்ள தோட்டமொன்றில் வசிக்கும் சுமார் 50-60 தொழிலாளர்கள் அடங்கிய குழு ஒன்றுக்கு தலா 2,500 ரூபா வீதம் கொடுத்து இந்த போலி வரிசையை உருவாக்கியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.


இந்த சம்பவம் தொடர்பில் பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் கோரிக்கையின் பேரில் இந்த போலி வரிசையை உருவாக்கி அதனை காணொளிகளாக எடுக்க முயன்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பின்னர், போலி எரிவாயு வரிசையில் காத்திருந்த பெண்கள்மற்றும்ஆண்களை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்தி வேறு இடத்திற்கு அனுப்ப தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகள் மற்றும் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(05)

# நுவரெலியாவில் ஓட்டோவிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சிசு தொடர்பில் அதிர்ச்சி தகவல்



லிந்துலை, என்போல்ட் தோட்டத்தில் கடந்த 10 ஆம் திகதி ஓட்டோ ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சிசு தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த சிசு பிறந்த கையோடு வயரொன்றில் கழுத்து நெறிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

குறித்த தோட்டத்தில் உள்ள வீடொன்றுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்றிலிருந்து கடந்த 10 ஆம் திகதி சிசுவின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சந்தேகத்தின் பேரில் ஒரு பிள்ளையின் தந்தையான 28 வயதுடைய ஓட்டோ சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மாவனல்லை பகுதியில் இருந்து என்போல்ட் தோட்டத்திற்கு வந்திருந்த பெண்ணொருவரின் பையிலிருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளதாகச் சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபரான 24 வயதான பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பெண்ணுக்கும் ஓட்டோ சாரதிக்கும் இடையிலிருந்த தகாத உறவு காரணமாகவே இந்த குழந்தை பிறந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த குழந்தை மாவனல்லை பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்துக் கடந்த 5 ஆம் திகதி பிறந்துள்ள நிலையில் சந்தேக நபரான பெண்ணும் அவரது சகோதரியும் இணைந்து குழந்தையைக் கழுத்து நெறித்து கொலை செய்துள்ளனர்.

இதனையடுத்து, இந்த பெண்ணும் ஓட்டோ சாரதியும் இணைந்து குழந்தையின் சடலத்தை அக்கரபத்தனை பகுதியில் புதைப்பதற்குத் திட்டமிட்டுள்ள நிலையில் சடலத்தை அடக்கம் செய்வதற்கு முன்னர் ஓட்டோ சாரதியின் தாய் அதனைக் கண்டுபிடித்து அயலில் உள்ளவர்களுக்கு தகவல் வழங்கியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் பொலிஸ் பாதுகாப்புடன் நுவரெலியா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும் நிலையில் இப்பெண்ணையும், ஓட்டோ சாரதியையும் வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், குறித்த பெண்ணின் சகோதரியையும் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாக அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.(05)

# தனமல்விலயில் கஞ்சா தோட்டம் கண்டுபிடிப்பு

## இளைஞன் கைது



தனமல்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிவுலஆர பிரதேசத்தில் பயிரிடப்பட்டு வந்த கஞ்சா தோட்டம் ஒன்று பொலிஸ்விசேடஅதிரடிப்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்விசேடஅதிரடிப்படையினருக்குக்கிடைத்ததகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த கஞ்சா தோட்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, இந்தகஞ்சா தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த 7,500 கஞ்சாசெடிகளைதீவைத்துஎரிப்பதற்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த கஞ்சா தோட்டத்தை பராமரித்து வந்ததாக கூறப்படும் தனமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக தனமல்வில பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசியல் பொய்கள்

2025 வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியைத் தொடங்கியிருப்பதாக ஆளும் தரப்பு அறிவித்துள்ளது. செலவின மதிப்பீடுகளை அமைச்சரவை திறைசேரிக்கு அனுப்பி வைத்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். அமைச்சரவைக் கூட்ட முடிவுகளைப் பகிர்ந்துகொள்ளும் செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முக்கியமாக 2025 வரவு செலவுத் திட்டத்தில் தனிநபர் வரியைக் குறைப்பது தொடர்பான பரிந்துரைகள் இடம்பெறும் என்பதை அவர் தெரிவித்தார்.

“2024 டிசெம்பர் 31 வரை மாத்திரமே வரவு – செலவு திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, 2025ஆம் ஆண்டுக்கானவரவு–செலவுதிட்டம்நிறைவேற்றப்படவேண்டும். அவ்வாறில்லைஎன்றால்ஜனவரியில்ஓய்வூதியம், அஸ்வசும உள்ளிட்ட மானியங்களை வழங்க முடியாது. எனவே தற்போது வரவு – செலவு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அதற்கான செலவின மதிப்பீடுகளை அமைச்சரவை திறைசேரிக்கு அறிவித்துள்ளது.

மாதாந்தம் 25,000 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை உள்ளடக்கி அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 24 மற்றும் 50 சதவீதமாக அதிகரித்து குறைந்தபட்ச சம்பளத்தை 55 000 ரூபாவாக வழங்குவதற்கான யோசனையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையின் பிரகாரம், வருமானம் ஈட்டும் போது செலுத்தப்படும் வரி தொடர்பில் அரச ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு நிவாரணம் வழங்க அமைச்சரவை இன்று முன்மொழிந்தது. உத்தேச பொருளாதார வளர்ச்சி வேகம் 3 சதவீதமாகக் காணப்பட்ட போதிலும், கடந்த காலாண்டுகளில் 5 சதவீதம் வரை பொருளாதார வளர்ச்சி வேகத்தை திறம்பட பேண முடிந்தது.

எனவே அதன் பலனை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்காக வருமான வரியைக் குறைப்பது தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகளை ஏற்று இந்த வரி குறைப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. திறைசேரிவட்டாரத்திலிருந்துகிடைக்கப்பெற்றதகவல்களின் அடிப்படையில் இவ்வாண்டு கடன் மீள் செலுத்தல் உள்ளிட்ட மொத்த செலவுகள் சுமார் 8800 பில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரி மற்றும் வரி அற்ற வருமானமாக 5000 பில்லியன் ரூபா எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறெனில் 3800 வரவு – செலவு திட்டப் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதற்காகக் கடன் பெற வேண்டியுள்ளது. அதில் ஒரு பகுதி உள்நாட்டிலும் மற்றைய பகுதி வெளிநாட்டிலும் பெறப்படும். அந்த வகையில் வெளிநாட்டில் கடன் வாங்கும் போது நிதி ஒதுக்கீடுகளைப் பெறவும், சர்வதேச நாணய நிதியத்துடனான விரிவான கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றவும் அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது” என்று அமைச்சர் பந்துல தெரிவித்துள்ளார்.

ஆக மொத்தத்தில், பன்னாட்டு நாணய நிதியத்துடன் பேசி வரிக்குறைப்பை மேற்கொள்ள ஆளும்தரப்பால் முடிந்திருக்கிறது. ஆனால், இதே விடயத்தை எதிர்க் கட்சிகள் கூறியபோது , அதாவது தாம் ஆட்சிக்கு வந்தால் நாணய நிதியத்துடன் பேசி வரி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் என்று அவை தெரிவித்தபோது, அப்படி நாணய நிதியத்தின் வேலை திட்டத்தைக் குழப்பினால் நாடு மீண்டும் இருண்ட யுகத்திற்குத் திரும்ப நேரிடும் என்றும் வரிசை யுகத்திற்குத் திரும்பவேண்டியிருக்கும் என்றும் அரசுத் தலைவரும் ஆளும்தரப்பிலுள்ள மற்றவர்களும் பயமுறுத்தினார்கள். இப்போ–து அவர்களே நாணய நிதியத்துடன் பேசி வரிக்குறைப் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

ஆகமொத்தத்தில் நாணய நிதியத்துடன் பேசி அதன் திட்டம் குறித்து மீளாய்வு செய்வது என்பது சாத்தியமானதே என்பது தெளிவாகியுள்ளது. அரசியலுக்காக மட்டுமே அப்படிச் செய்வது நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும்., பாழக்கும் என்கிற பொய்கள் சொல்லப்படுகின்றன என்பது இப்போது வெளிப்படையாகியுள்ளது.



## ஆப்கானிஸ்தான் பெண்களின் குமுறல்

**கிறிஸ்டினா கோல்ட்பாம் நஜீம் ரஹீம்**

ஆப்கானிஸ்தானில் ஆட்சி நடத்திவரும் தலிபான்கள், பெண்களுக்கான உரிமைகளுக்கு மேலும்கடுமையானகட்டுப்பாடுகளைவிதித்துள்ளனர். இது தொடர்பாக 114 பக்க சட்ட அறிக்கையைப் புதிதாக வெளியிட்டுள்ளனர். அதன்படி, ஆறாவது வகுப்புக்கு மேல் பெண் குழந்தைகள் பள்ளிகளில் படிக்கக் கூடாது. ஆடவர்கள் பணிபுரியும் பெரும்பாலான அலுவலகங்கள், தொழிற்சாலைகளில் பெண்கள் வேலை செய்யக் கூடாது. பூங்காக்கள், உடல் பயிற்சிக் கூடங்கள் (ஜிம்), ஒப்பனை நிலையங்கள் (சலூன்கள்) ஆகியவற்றுக்குப் பெண்கள் போகவே கூடாது. நீண்ட தொலைவு பயணங்களைத் தகுந்த ஆண் உறவினர் துணையின்றி மேற்கொள்ளக் கூடாது. வீட்டைவிட்டுச் செல்வதானால் தலை முதல் கால் வரையில் இஸ்லாமிய வழக்கப்படி நீண்ட அங்கியால் போர்த்தியபடி செல்ல வேண்டும்.

வீட்டுக்கு வெளியில் பெண்களின் குரல் கேட்கவே கூடாது, அதாவது பெண்கள் உரத்துப் பேசக் கூடாது. எந்த ஒரு தேவைக்கும் குடும்பத்தைச் சேர்ந்த ஆண் உடன் வராமல் பெண்கள் தனியாக வீட்டைவிட்டு வெளியே போகவே கூடாது. பெண்கள் மீது தலிபான்கள் விதித்துவரும் கட்டுப்பாடுகளில் பெரும்பாலானவை கடந்த மூன்று ஆண்டுகளாக படிப்படியாக அமலுக்கு வந்துவிட்டன. இப்போது புதிய துறைகளில், புதிய வழிகளில் கட்டுப்பாடுகளை அறிவித்துவருகின்றனர். இந்த அறிக்கையானது ஏற்கெனவே அமலில் உள்ள சட்டங்களையும் புதிய சட்டங்களையும் கொண்டுள்ளது. இவற்றை மீறினால், ‘நல்லொழுக்கம் காப்பு- தீயொழுக்கம் தடை’ ஆகியவற்றுக்கான காவல் துறையினர் வழக்குப்பதிவுசெய்து உரிய தண்டனைகளை வழங்க நடவடிக்கை எடுப்பார்கள்.

படிக்க வேண்டும், நல்ல வேலைக்குப் போக வேண்டும், குடும்ப வளர்ச்சிக்குத் தங்களால் ஆன உதவிகளைச் செய்ய வேண்டும் என்றெல்லாம் கனவு கண்ட பெண்களுக்கு தலிபான்களின் இந்தச் சட்டங்கள் மிகுந்த கலக்கத்தையும் மனச்சோர்வையும் அளித்துள்ளது. தலிபான் அதிகாரிகள் சிறிது காலம் கழித்து இந்தக் கட்டுப்பாடுகளை விலக்கிக்கொண்டுவிடுவார்கள் என்று சிலர் நம்பிக்கை தெரிவித்தனர்.

தலிபான்கள் ஆட்சிக்கு வந்த உடனேயே உயர்நிலை பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் சிறிது காலத்துக்கு மூடப்பட்டன. பிறகு மகளிர் அவற்றில் பயில தடை விதிக்கப்பட்டு ஆடவர் மட்டும் பயில திறக்கப்பட்டன. அவை மீண்டும் திறக்கப்படும் தங்களுக்கும் படிக்க வாய்ப்பு கிடைக்கும் என்று நம்பியவர்கள், ஆறாவது வகுப்புக்கு மேல் பெண்கள் படிக்கக் கூடாது என்ற ஆணையைப் பார்த்ததும் நம்பிக்கையை இழந்துவிட்டனர்.

பெண்கள் வீட்டோடு இருக்க வேண்டும், வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும், வீட்டில் உள்ள ஆடவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும், தேவையில்லாமல் வீட்டைவிட்டு வெளியே வரக் கூடாது; படிப்பு, வெளியிடத்து வேலையெல்லாம் பெண்களுக்கு அவசியமே இல்லை என்ற கண்ணோட்டத்தில் இந்தச் சட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன.

### மாறவில்லை தலிபான்கள்

‘தலிபான்கள் மாறிவிட்டார்கள் அல்லது மாறியிருப்பார்கள் என்று நினைத்தேன், அவர்களுடைய சிந்தனைப் போக்கு மாறவே இல்லை, 1996 முதல் 2001 வரையில் ஆப்கானிஸ்தானை ஆண்டபோது எதையெல்லாம் செய்தார்களோ அவற்றையே மேலும் தீவிரமாக இப்போது அமல்படுத்துகிறார்கள்‘ என்று வருந்தி னார் முஸாரத் ஃபராமார்ஸ் (23). இவர் வடக்கு ஆப்கானிஸ்தானில் பாக்லான் என்ற பகுதியில் வசிக்கிறார். (இந்தக் கட்டுரையில் வரும் பெண்களின் பெயர்கள் அவர்களுடையவை அல்ல, ஒரு அடையாளத்துக்காகத்தான்).

2021இல் ஆட்சியைப் பிடித்த தலிபான்கள், அமெரிக்க ஆக்கிரமிப்பில் ஆப்கானிஸ்தான் இருந்தபோது ஓரளவுக்குப் பழமைவாத கட்டுப்பாடுகளை விலக்கிய நகர்ப்புறங்களில் பெண்களுடைய சுதந்திரத்தை மீண்டும் ஒடுக்கும் நடவடிக்கைகளைப் படிப்படியாக ஆனால் தீவிரமாக அமல்படுத்துகின்றனர். இவையெல்லாம் மத ஒழுக்க நெறிகளின் அடிப்படையில் இயற்றப்பட்ட சட்டங்கள் என்கின்றனர். இஸ்லாமிய மதச் சட்டப்படி ஆளும் நாடுகளில் உயர்நிலைபள்ளிக்கூடபடிப்பைத்தடைசெய்திருக்கும் ஒரே நாடு இப்போது ஆப்கானிஸ்தான் மட்டுமே.

மத அடிப்படையிலான சட்டங்கள் என்று 114 பக்க அறிக்கை வெளியாகிவிட்டதை அடுத்து, அவற்றை அமல்படுத்தும் காவல்படையினர் இனி தங்களைத் தேடிவந்து தண்டிப்பார்கள் என்று மக்கள் அஞ்சுகின்றனர். அரசு அதிகாரிகள் வெள்ளைச் சீருடையில் எல்லா வீதிகளின் மூலைகளிலும் நிற்கின்றனர். தெருவில் அல்லது வீட்டு வாசலில் யாராவது மத ஒழுக்க சட்டத்தை மீறுவதாகத் தெரிந்தால் உடனே அருகில் வந்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கின்றனர்.

### அதிகாரங்கள் என்ன?

இதற்கும் முன்னால் வரையில், மத ஒழுக்க சட்டங்கள் மீறப்பட்டால் அதிகாரிகள் அருகில் வந்து எச்சரிப்பார்கள். சட்டம் என்ன சொல்கிறது, அதைத் தொடர்புள்ளவர்கள் எப்படி மீறினார்கள் என்று சுட்டிக்காட்டுவார்கள். இப்போது அப்படி சட்டத்தை மீறுகிறவர்களுக்கு என்ன தண்டனை விதிக்க வேண்டும், அவர்களுடைய சொத்துகளுக்கு எப்படிப்பட்ட சேதத்தை விளைவிக்க வேண்டும் என்றெல்லாம் விளக்கமாகவே அச்சடித்து தந்திருக்கிறார்கள். அதிகபட்சம் மூன்று நாள்களுக்குச் சிறைப்பிடிக்கவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது.

வடமேற்கு ஆப்கானிஸ்தானத்தின் படா அக்ஷன் மாகாணத்தில் வசிக்கும் ஃபிரேஷ்டா நஸீமி (20), உயர்படிப்பு படிக்க முடியும் என்று கொண்டிருந்த நம்பிக்கையின் கடைசி துளியும் இப்போது மறைந்துவிட்டது என்று மிகவும் வருந்துகிறார். பெண் குழந்தைகள் தொலைக்காட்சி மூலம் படிக்க புதிய அரசு அனுமதிக்கும் என்று முன்னாள் வகுப்புத் தோழிகள் சொல்லியிருந்த தகவலால் நம்பிக்கையுடன் இருந்த அவர், புதிய சட்டங்களைப் படித்த பிறகு

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ஆப்கானிஸ்தான் பெண்களின் குமுறல்

4ம் பக்க தொடர்ச்சி...........

கவலையில் ஆழ்ந்துவிட்டார்.

கோஷ்ட் மாகாணத்தில் அப்படி தொலைக்காட்சி மூலம் நடந்த கல்வி ஒளிபரப்பைக் கேள்விப்பட்ட தலிபான் அதிகாரிகள் அங்கு விரைந்து அந்த ஒளிபரப்பை நிறுத்தியதுடன் அதை நடத்தியவர்கள் மீது நடவடிக்கையும் எடுத்துள்ளனர். இதனால் நஸீமி நம்பிக்கை இழந்துவிட்டார். இனி நாட்டில் எல்லா மாகாணங்களிலும் இதுதான் நடக்கும் என்று அவர் தெரிந்துகொண்டுவிட்டார்.

'நான் இப்போது வீட்டுக்குள்ளேயே சிறை வைக்கப்பட்டுவிட்டேன். எங்காவது தனியாக வெளியில் போக நினைத்தால், டாக்ஸி டிரைவருடன்கூட பேசி போக வேண்டிய இடத்தைச் சொல்ல முடியாது. கடைக்குப் போயும் எதையும் வாங்க முடியாது. யாரோ ஒரு பெண்ணுடன் ஏன் பேசுகிறாய் என்று தலிபான் அதிகாரிகள் முதலில் கடைக்காரர் மீது நடவடிக்கை எடுப்பார்கள். படித்து பொறியாளராக வேண்டும், அதில் கிடைக்கும் நிரந்தர உயர் வருமானம் மூலம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஆசைக் கனவுகள் நொறுங்கிவிட்டன. என்னுடைய எதிர்காலமா, இனி வீட்டிலேயே அடைந்து கிடைந்து பிள்ளை குட்டிகளைப் பெற்று அவற்றை வளர்ப்பதுதான்' என்று விரக்தியுடன் பதில் அளித்தார்.

### ஹைபதுல்லா அகுண்ட்ஸாதா

தலிபான் தலைவர் ஹைபதுல்லா அகுண்ட்ஸாதா வழிகாட்டலின்படி ஷரியா சட்டங்களைத் தொகுத்து, ஒவ்வொரு அமைச்சகமும் என்ன செய்ய வேண்டும்' என்ன செய்யக் கூடாது என்று வழிகாட்டவே இந்த 114 பக்க சட்டத் தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது என்று அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தலிபான்கள் பதவிக்கு வருவதற்கு முன்னால், அமெரிக்க ஆதரவு ஆப்கானிஸ்தான் அரசு கடைப்பிடித்த மேற்கத்திய நாடுகளின் நிர்வாக நடைமுறைகளை அடியோடு தூக்கி எறியவே இந்த ஏற்பாடு.

தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பிறகு மேற்கத்திய நாடுகளிடமிருந்து அன்னியப்பட்ட நிலையில்கூட, மகளிர் மீதான கட்டுப்பாடுகளை விலக்கவோ தளர்த்தவோ முடியாது என்று தலிபான் ஆட்சியாளர்கள் மறுத்துவிட்டனர். இஸ்லாமிய போதனைப்படிதான் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன, இவற்றில் தலையிடவோ மாற்றவோ மற்ற எவருக்கும் உரிமையில்லை என்று கூறிவிட்டனர். 'ஆப்கானிஸ்தான் என்பது இஸ்லாமிய நாடு, இஸ்லாமிய சட்டம் அதன் சமூகத்துக்கானது' என்கிறார் அரசின் பத்திரிகைத் தொடர்பாளர் ஜபியுல்லா முஜாஹித்.

மனித உரிமை குழுக்களும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆப்கானிஸ்தான் பொறுப்புக் குழுவும் இந்தக் கட்டுப்பாடுகள் கூடாது என்று வலியுறுத்தியுள்ளன. 'ஆப்கானிஸ்தான் பெண்கள் மீது ஏற்கெனவே விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளே சகிக்க முடியாதவை, இப்போது மேலும் கடுமையான கட்டுப்பாடுகளா?' என்று வருத்தம் தெரிவித்தார் ஐ.நா. குழுத் தலைவர் ரோசா ஒடுன்பயேவா.

### பெண்கள் படங்கள் அழிப்பு

வீதிகளில் நுகர்பொருள் விற்பனை விளம்பரங்களுக்காக வைக்கப்படும் தட்டிகள், சுவரொட்டிகள் ஆகியவற்றில் காணப்படும் பெண்களின் முகங்கள் சுரண்டப்படுகின்றன அல்லது தார் பூசி மறைக்கப்படுகின்றன. பள்ளிக்கூட சுவர்களில் பெண்களின் படங்கள் இருந்தால் அவை மறைக்கப்படுகின்றன. ஜவுளிக்கடைகளில் பெண்களின் ஆடைகள் அணிவிக்கப்பட்டு நிறுத்தப்படும் பெண் பொம்மைகளுக்குக்கூட கறுப்பு நிறத்தில் முழு பர்தா போட்டு மறைத்துவிட்டனர். பர்தாவை 'அபயா' என்று அழைக்கின்றனர். கறுப்புநிற பர்தா கிடைக்காவிட்டால் சிகரெட் பாக்கெட்டுகளில் இருக்கும் அலுமினிய நிற உறை போன்ற காகிதத்தை பொம்மை மீது சுற்றிவிடுகின்றனர்.

### வீட்டுச் சிறை

இந்தச் சட்டத் தொகுப்பு வெளிவருவதற்கு முன்னதாகவே இப்படியெல்லாம் தடைகள் வரும் என்று எதிர்பார்த்த பெண்கள் பெருமளவில் வீட்டுக்குள்ளேயே முடங்கத் தொடங்கிவிட்டனர். 'கடந்த மூன்று மாதங்களாக வீட்டைவிட்டு வீதிக்குக்கூட வரவில்லை, வீட்டுச் சிறையிலேயே அடைபட்டிருக்கிறேன்' என்கிறார் ஃபராமார்ஸ்.

அமெரிக்க ஆக்கிரமிப்பின்போது வளரிளம் பருவத்தில் இருந்த பெண்களுக்குத்தான் இந்தத் தடைகள் மிகவும் மனச் சுமையை அதிகப்படுத்திவிட்டன. கல்வி, கலை, விளையாட்டு என்று பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்ற முடிவோடு இருந்தவர்கள் வாழ்க்கையே இருண்டுவிட்டதைப் போல வருந்துகின்றனர்.

சுதந்திர உணர்வை இழக்காத பெண்கள், பெண்களே தனிப்பயிற்சியில் கற்றுத்தரும் ரகசிய பள்ளிக்கூடங்களில் அன்றாடம் இரண்டு மணி நேரமாவது படிக்கச் செல்கின்றனர். இந்தப் பள்ளிக்கூடங்கள் வீடுகளில் அதிக வசதியில்லாமல் இயங்குவதால் மிகச் சில பெண்கள் மட்டுமே சேர முடிகிறது. அவர்களும் வீதியில் நடமாட அஞ்சும் நிலை வந்துவிட்டது. கல்வி பயில வெறும் புத்தகங்கள் மட்டும் சிலவகை படிப்புக்கு போதாது என்பதும் தடையாக இருக்கிறது. இணையதளத் தொடர்பு, வருவதும் போவதுமாக நிலையில்லாமல் இருந்தாலும் ஆன்-லைன் வகுப்புகளில் பலர் சேர்ந்துள்ளனர்.

மொஹாதிசா ஹஸானி (18) என்ற பெண் ஓராண்டுக்குப்பிறகு மீண்டும் தனது படிப்பை ரகசியமாகவே தொடர்ந்திருக்கிறார். அவருடைய இரண்டு தோழிகள் எப்படியோ அமெரிக்கா, கனடா நாடுகளுக்குச் சென்று அங்கு உயர்கல்வி பயில்கின்றனர். வாரத்தில் இரண்டு மணி நேரம் அவர்களிடம் தொலைபேசி வாயிலாக அவர்கள் படிக்கும் வேதியியல், இயற்பியல் பாடங்களை சொல்லச் சொல்லிக் கேட்டு படிக்கிறார். அவர்கள் இருவரும் சுதந்திரமாக படிக்கிறார்களே என்று எனக்குப் பொறாமையாகவும் இருக்கிறது என்கிறார்.

சில தோழிகள் ஓவியம் வரைகின்றனர், சிலர் கதை கட்டுரைகளை எழுதுகின்றனர், சிலர் டேக்வாண்டோ விளையாடுகின்றனர், தடைகள் இருந்தாலும் மனச்சோர்வை விலக்கிக்கொண்டு அவ்வப்போது இப்படி துணிச்சலுடன் எதையாவது செய்கிறோம் என்கிறார்கள்.

'நான் என் நாட்டை நேசிக்கிறேன், மக்களை நேசிக்கிறேன், இப்போதுள்ள அரசாங்கத்தைத்தான் விரும்பவில்லை, தங்களுடைய மத நம்பிக்கைகளை இப்படி மக்கள் மீது தேவையின்றி கட்டாயப்படுத்தி திணிக்கின்றனர்' என்கிறார் ஹஸானி.

### தூக்க மாத்திரையே துணை

ரஹ்மானி (43) தினந்தோறும் இரவு தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டுவிட்டு தூங்கச் செல்கிறார். இருபதாண்டுகள் அவர் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் பணிபுரிந்தார். நான்கு குழந்தைகளுக்கும் உணவு, உடை, கல்விச் செலவுக்குப் போதிய அளவுக்கு அந்த வேலையில் சம்பாதித்தார். இப்போது வேலைக்குப் போகத் தடை விதித்துவிட்டதால் அடிப்படை வசதிகளுக்குக்கூட பணமின்றி தவிக்கிறார். எதிர்காலத்தை நினைத்து இரவுகளில் மனம் அலைபாய்வதால் தூக்கம் வராமல் தவித்தவர் இப்போது மாத்திரைகளுக்கு அடிமையாகிவிட்டார்.

'ஒரு காலத்தில் நான் நானாக இருந்தேன், என்னுடைய படிப்பும் வேலையும் எனக்கொரு ஆளுமையைத் தந்தது, இப்போது நான் சமூகத்திலேயே மதிப்பில்லாமல் ஆக்கப்பட்டுவிட்டேன்' என்று தன்னுடைய நிலை குறித்துப் பேசுகிறார் ரஹ்மானி.

© நியூயார்க் டைம்ஸ் நியூஸ் சர்வீஸ்



# காணாமல்போன ஓட்டோ சாரதியை கண்டுபிடிக்க விசேட சோதனை



காணாமல்போன ஓட்டோ சாரதி ஒருவரை கண்டுபிடிக்க பாணந்துறை பதுவில பகுதியில் விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஓட்டோ சாரதி கடந்த 40 நாள்களாக காணாமல்போயுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் இறுதியாக பெண்ணொருவருடன் தனது ஓட்டோ சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான ' பாணந்துறை சலிந்து ' என்பவருக்குச் சொந்தமான பொருள் ஒன்றை திருடிய சம்பவம் தொடர்பில் இந்த ஓட்டோ சாரதியும் மற்றுமொரு நபரொருவரும் கடந்த 2021 ஆம் ஆண்டில் இனந்தெரியாத கும்பலால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இதன்போது, மற்றைய நபர் கொலை செய்யப்பட்டுள்ள நிலையில் ஓட்டோ சாரதி அந்த கும்பலிடமிருந்து தப்பிச் சென்றுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தின் சாட்சியாக இருந்த ஓட்டோ சாரதி கடந்த 40 நாள்களுக்கு முன்னர் காணாமல் போயுள்ள நிலையில் அவரை கண்டுபிடிக்க விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு மடுல்சீமையில் ஒருவர் காயம்

## சந்தேகநபர் கைது

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மீகாகியூல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எக்கிரிய பகுதியில் வியாழக்கிழமை மாலை இரு நபர்களுக்கு இடையிலான வாக்குவாதத்தின்போது நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டார் எனவும் அந்த நபர் பலத்த காயமடைந்த நிலையில் மீகாகியூல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

52 வயதுடைய எக்கிரிய பகுதியை சேர்ந்தவரே தாக்குதலில் காயமடைந்தவர் ஆவார்.

இந்நிலையில், தாக்குதலில் ஈடுபட்ட நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் அவர் அதே எக்கிரிய பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.தாக்கியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளில் மடுல்சீமை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

சாரணையின் பின்னர் சந்தேக நபரை வெள்ளிக்கிழமை பசறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதப்பட்டார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)



# போலி கடவுச்சீட்டில் ரோமுக்கு தப்ப முயன்ற 7 சிரியப் பிரஜைகள் கட்டுநாயக்கவில் கைது

போலி கடவுச்சீட்டுகளை பயன்படுத்தி இத்தாலியின் தலைநகரமான ரோமுக்கு தப்பிச் செல்ல முயன்ற ஏழு சிரியப் பிரஜைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிரியா நாட்டைச் சேர்ந்த மூன்று ஆண்களும் நான்கு பெண்களுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சந்தேக நபர்கள் இந்தியாவின் சென்னை நகரத்திற்கு செல்வதற்காக வியாழக்கிழமை காலை 07.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றுள்ளனர்.

இதன்போது, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கொண்டு வந்த கடவுச்சீட்டுகள் போலியானது எனத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்த போலி கடவுச்சீட்டுகளை தயாரிப்பதற்கு தலா 2 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டதாக தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் எழுவரும் முதலில் மலேசியாவுக்கு சென்று அங்கிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(05)



# பலாச்சோலையில் விவசாயிகளுக்கான வயல் பாடசாலையின் அறுவடை



(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின்ஏற்பாட்டில்போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காக்காச்சிவட்டைவிவசாய போதனாசிரியர் பிரிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ரீ.பவிலேகா தலைமையில் பலாச்சோலை கிராமத்தில் விவசாயிகளுக்கான வயல் பாடசாலை அறுவடை விழா நடைபெற்றது.



இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் மு.பரமேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அத்துடன் தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் திருமதி நித்தியா நவரூபன், இவ் வயல் பாடசாலை திட்டத்தில் பெரிதும் அனுபவம் வாய்ந்த திருகோணமலை மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் எஸ்.சர்வேஷ்வரராசா, மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலக உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சங்கீதா, பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலக பாடவிதான உத்தியோகத்தர்கள், தெற்கு வலய விரிவாக்கல் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

நஞ்சற்ற இயற்கை வீட்டுத் தோட்டம் தொடர்பான களப்பாடசாலையில் 15 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான 7 விதமான மரக்கறி பயிர்களின் விதை உட்பட்ட உள்ளீடுகள் விவசாய திணைக்களத்தால் வழங்கப்பட்டு தொடர்ந்து12வாரங்கள் அவர்களுக்கான தொழில்நுட்ப பயிற்சிகள் விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டு செய்கை பண்ணப்பட்ட வீட்டுத்தோட்டத்தின்அறுவடை வெற்றிகரமாக நடைபெற்றது. இதன்போது விவசாயிகளில் கலை நிகழ்ச்சிகளும் அவர்களது திறமை மற்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக அரங்கேற்றப் பட்டன.

(05)

# தேர்தல் விஞ்ஞாபனமும் மக்கள் விழிப்புணர்வும்

## கிண்ணியாவில் நடந்தது





(எச் எம் ஹலால்தீன்)

இலங்கையில் நடைபெற இருக்கும் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட பொதுமக்களிடம் விஞ்ஞாபனத்தைப்பகிர்வதை மையமாகக்கொண்டுதிருகோணமலைமாவட்ட சமூகத் தலைவர்களுடன் கலந்துரையாடல் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம் பெற்றது.

'உள்ளடக்கிய ஆட்சிக்கான குடிமக்களின் குரல் மற்றும் முன் முயற்சி' எனும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட, 'பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை பகிர்ந்து கொள்ளல்' செயல்முறை கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் புகாரி முகமத் தலைமையின் கீழ் இடம்பெற்றது.

கிழக்கு சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், சமூக செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள், சமயத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பெண்கள் அமைப்புகள், இளைஞர்கள், யுவதிகள் உட்பட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

## ரணிலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தற்பொழுது நாட்டுக்குத் தீமூட்டிய குழுவும், வங்குரோத்தடையைச் செய்த குழுவுக்கு பாதுகாப்பு வழங்குகின்றவர்களும் ஒன்றாக இணைந்துள்ளார்கள். ரணிலும் அநுரவும் அரசியல் திருமணம் செய்துகொண்டு தேனிலவைகொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த தேனிலவுக் கொண்டாட்டத்தை நிறுத்த வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி விவசாய கடனை இரத்து செய்வதால் அநுரவும் ரணிலும் அதற்கு எதிராக ஒன்றிணைந்து இருக்கின்றார்கள். குறைந்த விலையில் உரம் வழங்குவதற்கும், வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கும், எரிபொருள் நிவாரணம் வழங்கப்படுவதற்கும், இவர்கள் எதிராக இருக்கின்றனமையாலே தற்பொழுது ஒன்றாக இணைந்து கொண்டிருக்கின்றார்கள்

அத்தோடு நாட்டை கட்டியெழுப்புவதற்கு எதிராக ரணிலும் அநுரவும் தற்பொழுது ஒன்றாக இணைந்து கொண்டிருக்கின்றார்கள். மக்கள் தொடர்ந்து அசௌகரியத்துடன் இருப்பதை அவர்கள் விரும்புகின்றார்கள். வேளாண்மை விவசாயிகளையும், பால் பண்ணையாளர்களையும் பாதுகாப்பதற்கு இவர்கள் எதிராக இருக்கின்றார்கள்

எனவே இந்த ரணில் அநுர ஆகியோரின் தந்திரக்கூட்டைத்தோல்விஅடையச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படுகின்ற, ஐக்கிய மக்கள் கூட்டணியின் பொதுமக்களுடைய யுகத்திற்கு பலத்தைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம். இன, மத, குல, பேதங்களை மறந்து ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றி பெற அனைவரையும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

## செப். 18 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகற்றுவதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகளுக்கு 6 வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், செப்டெம்பர் 21 இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் 48 மணித்தியாலங்களுக்குள் அனைத்து பரப்புரை நடவடிக்கைகளும் நிறுத்தப்படவேண்டும் எனவும் தேர்தல்கள்

## வாகன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில்தற்போது நிலவும்பொருளாதார மற்றும் சுற்றாடல் காரணிகளைக் கருத்திற்கொண்டு இந்தத் தடையை நீக்க ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளது. அதன்படி, 304 எச்.எஸ். (ஹிஷிறீ) குறியீடின் கீழ் வகைப்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் இயந்திரம் சாரா வாகன உதிரிபாகங்களை இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரம்மூன்றுகட்டங்களில்செய்யப்படும்.

• முதலாவது கட்டம் : பொதுப் பயணிகள் போக்குவரத்து வாகனங்கள், சிறப்பு நோக்க வாகனங்கள் மற்றும் பிற இயந்திரம் சாரா வாகன உதிரிப் பாகங்களின் இறக்குமதிக்கு 2024 ஒக்டோபர் 01 முதல் அனுமதி வழங்கப்படும்.

• இரண்டாம் கட்டம் : வணிக அல்லது சரக்கு போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனங்களின் இறக்குமதிக்கு 2024 டிசம்பர் 01 முதல் அனுமதி வழங்கப்படும்.

• மூன்றாவது கட்டம் : தனியார் பயன்பாட்டுக்கான வாகனங்கள் (கார்கள், வேன்கள், விளையாட்டு பயன்பாட்டு வாகனங்கள் போன்றவை உட்பட) இறக்குமதிக்கு 2025 பெப்ரவரி 01 முதல் அனுமதி வழங்கப்படும்.

விதிக்கப்பட்ட தடையை படிப்படியாக நீக்குவது மூலம், இந்நாட்டின் வாகன தொழில்துறைக்கு புத்துயிர் அளிப்பதோடு, பொருளாதாரத்தையும் மீட்டெடுக்க எதிர்பார்க் கப்படுவதோடு, பழைய வாகனங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் எரிபொருள் செயற்திறனின்மையைக் குறைத்தல் மற்றும் பராமரிப்புச் செலவு அதிகரிப்பைக் கட்டுப்படுத்துதல் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க இது உதவும் என்று அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறக்குமதி கட்டுப்பாடுகள் நீடிக்கப்பட்டதன் காரணமாக, இலங்கையில் தற்போது அதிகளவான பழைய வாகனங்கள் எஞ்சியி ருப்பதுடன், எரிபொருள் செயற்திறனின்மை காரணமாக வீதி பாதுகாப்பு மற்றும் அதன் மூலம் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புகள் தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. வாகன இறக்குமதி சம்பிரதாயமாக முக்கிய வருமான ஆதாரமாக உள்ளதனால், புதிய வாகன இறக்குமதியை அனுமதிப்பதன் ஊடாக பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அரச வருமானத்தை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், வாகன இறக்குமதியானது நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் அந்த நிலைமையை முகாமைத்துவம் செய்ய வாகன இறக்குமதிக்கு மேலதிக சுங்க வரி விதித்தல் போன்ற நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையும் கையெழுத்திட்டுள்ள பெரிஸ் சாசனத்தில் உள்ளடங்கிய 'தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை (NDCs) பூர்த்தி செய்வதற்கான தற்போதைய அர்ப்பணிப்பும், 2050 ஆம் ஆண்டுக்குள் 'பூஜ்ஜிய உமிழ்வு நிலையை' அடைவதற்கான தற்போதைய இலக்கும், இந்த முடிவை எடுப்பதில் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. புதிய வாகன இறக்குமதிக் கொள்கையின் மூலம் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சிற்ஷலி 4 முதல் சிற்ஷலி 6 வரையிலான தரநிலைக்கு மாறுவதன் மூலம் வாயு உமிழ்வு தரநிலைகளுக்கு இணங்குவதும் அவசியமாகும்.

இதன் மூலம் மின்சக்தி வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதையும் ஆளும்தரப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது. 2029 ஆம் ஆண்டளவில், பெற்றோல் அல்லது டீசலில் இயங்கும் முச்சக்கர வண்டிகளை இறக்குமதி செய்வதைத் தடைசெய்து, தற்போதுள்ள வாகனங்களை மின்சார வாகனங்களாக மாற்றுவதும் ஊக்குவிக்கப்படும்.

இந்நாட்டில் ஒவ்வொரு வருடமும் சராசரியாக 30,087 வீதி விபத்துக்கள் (முதன்மையாக மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள்) ஏற்படுவதுடன், அவற்றைக் குறைக்கும் முயற்சியில் ஆளும்தரப்பின் வாகன இறக்குமதிக் கொள்கைகள் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் உள்ளடக்கியுள்ளன.

இந்த புதிய கட்டமைப்பின் கீழ், வாகன இறக்குமதி புதிய மாதிரிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. அதாவது, உற்பத்தி செய்யப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு குறைந்த மற்றும் விளையாட்டு சார்ந்த வாகனங்கள் (றீஷீவி) போன்றவை உற்பத்தி செய்யப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு குறைந்த பொதுப் போக்குவரத்து மற்றும் வர்த்தக செயற்பாட்டு வாகனங்களுக்கான தடை நீக்கப்படும்.

சிறப்பு செயல்பாடுகள் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் பத்து ஆண்டுகள் வரை பழமையானதாக இருக்கலாம். மேலும், இறக்குமதியாளர்கள் இந்த வாகனங்களை இறக்குமதி செய்த 90 நாட்களுக்குள் பதிவு செய்து விற்பனை செய்யவேண்டும் மற்றும் தாமதத்திற்கு அபராதம் விதிக்கப்படும். மேலும், வாகன மற்றும் உதிரிப் பாகங்கள் இறக்குமதி செய்பவர்கள், வாகன ஒன்றிணைப்பாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஒழுங்குபடுத்துவதற்காக வருடாந்த அனுமதிப் பத்திரம் வழங்கும் முறையும் அறிமுகப்படுத்தப்படும்.

இலங்கை, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கை அடைய வேண்டிய நிதி இலக்குகளுக்கு ஆதரவு வழங்கி, படிப்படியாக இறக்குமதியை மீண்டும் தொடங்குதல் மற்றும் சுங்க வரி மூலம் மேலதிக வருமானத்தை ஈட்டவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## இரண்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாக்க வலயங்களிலும் மேற்கொள் ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## தேசப்பற்றுள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மாநாட்டில் தேசப்பற்றுள்ள தேசிய முன்னணியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான நுவன் வல்லந்துடாவ உரையாற்றிக்கொண்டிருக்கையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இக்குழுவினர் பல்வேறு தகாத வார்த்தைகளால் கூச்சலிட்டபடி வன்முறையில் ஈடுபட்டதுடன், கைகளில் இருந்த தடிகளாலும், வாள்களாலும் ஏற்பாட்டாளர்களை தாக்கினர் என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. ஜே.வி.பி. தொடர்பாக அவர் கருத்து வெளியிடும்போதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, அமைப்பாளர்களுக்கும் கும்பலுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

'இது அமைதியான மாநாடு, இங்கு பிரச்சினை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. எங்கள் கருத்தை கேட்க முடியாவிட்டால், இங்கிருந்து வெளியேறுங்கள்' என மாநாட்டின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் இதனை கருத்திற்கொள்ளாது கூச்சலிட்ட அந்தக் குழுவினர் தாக்கதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டத்தில் குழப்பம் விளைவிக்கப்படுவது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. விரைந்த பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர்.

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் குழுவே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகவும் சுதந்திரத்தை சகித்துக்கொள்ள முடியாத பயங்கரவாத மனநிலைகொண்ட அரசியல் குழுவினாலேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான தாக்குதலால் தன்னை அச்சுறுத்த முடியாது என்றும் சட்டத்தரணி நுவன் வல்லந்துடாவ தெரிவித்தார்.

## குடிவரவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்தியம்பினார். அதை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தாக்கல் செய்வதற்கு உத்தரவிட்டனர்.

இந்த வழக்குக்காக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளரை செப்டெம்பர் 25 நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலத்திரனியல் வீசா நடைமுறை தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை பரிசீலித்த நீதிமன்றம் குறித்த உத்தரவை வழங்கியுள்ளது.

ப்ரீத்தி பத்மன் சூரசேன, குமுதுனி விக்ரமசிங்க, அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் இந்த உத்தரவை வழங்கியுள்ளது.

ஆளும்தரப்பு சமீபத்தில் அறிமுகப்படுத்திய மின்னியல் வீஸா நடைமுறையை இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவை நடைமுறைப்படுத்தாமல் நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மின்னியல் வீசா நடைமுறையில் முறைகேடுகள் காணப்படுவதால், அதனை இடைநிறுத்துமாறு கோரி, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், ரவூப் ஹக்கீம், பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோரா தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை பரிசீலித்த மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம், குறித்த நடைமுறையை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் உத்தரவை அண்மையில் பிறப்பித்திருந்தனர்.

ஆயினும் அது நடைமுறைப்படுத் தவில்லையென தெரிவித்து நகர்த்தல் மனு மூலம் மனுதாரர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கையை பரீசீலித்த நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை வழங்கியது.

## திலீபனின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கல் செய்தனர்.

குறித்த மனு மீதான விசாரணை செப். 18நடைபெறும் என்றும், அன்றைய தினம் மனுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மற்றும் யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயர் மணிவண்ணன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகவேண்டும் என்றும் மன்று கட்டளையிட்டுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பின்புறமாக அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமே நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறுவதே வழமை.

## போலித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமாக பொதுமக்களையும் வெகுசன ஊடகங்கள் வாயிலாக அறிவுறுத்தியுள்ளது.

இருப்பினும், இன்றைய தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குப் புறம்பாக பல்வேறு நபர்களும் அமைப்புகளும் தேர்தல் செயன்முறை சம்பந்தமாக (அதாவது; வாக்கு அடையாளமிடும் விதம், வாக்குகளையும் விருப்புகளையும் எண்ணும் விதம், தேர்தல் சட்டங்களை வலுவாக்கம் செய்தல் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளும் வேறு நிர்வாகம் சார்ந்த பணிகளும் குறித்து) அடிக்கடி தெரிவித்துவரும் கூற்றுக்களும் அபிப்பிராயங்களும் ஊடகங்கள் வாயிலாக பரப்புரை செய்யப்படுவதை அவதானிக்க முடிகிறது.

அவை தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் அல்ல என்பதும், அவ்வாறான கூற்றுக்கள் எவையும் உத்தியோகபூர்வ செல்லுபடித்தன்மை அற்றவை. அவை சம்பந்தமான பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லை.

தேர்தல் ஆணைக்குழுவினால் தேர்தல் தொடர்பான அனைத்து விடயங்களும் பணிகளும் உத்தியோகபூர்வமாக பொதுமக் களுக்கு அறிவிக்கப்படுவதால் வேறு நபர்களோ அமைப்புகளோ வெளியிடும் கூற்றுக்களையும் அபிப்பிராயங்களையும் அறிவுறுத்தல்களையும் பொருட்படுத்த வேண்டாம் என்றுள்ளது.

## பொருளாதாரத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் இலஞ்சம் வாங்கும் அளவுக்கு மட்டுமே பொருளாதாரம்? நாம் இதைவிடப் பொருளாதாரத்தை பெரிதாக்குவோம். தனக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து துறைகளிலும் செயற்படும் ஒரு சிறந்த சமூகம், ஒரு சிறந்த கல்வி மாற்றத்தை உருவாக்குவோம்.

அதுதான் நாடு. அப்படி ஒரு நாடு வேண்டாமா? அதைத்தான் நாங்கள் வழிநடத்துகிறோம். இப்போது சிறுபோகமும் முடிந்துள்ள நேரத்தில், நாங்கள் நாட்டை பொறுப்பேற்றுகட்டியெழுப்பதயாராகவுள்ளோம் என்றார்.

அநுரகுமார ஆட்சிக்கு வந்தால் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என்றும் மீண்டும் வரிசை யுகம் தோன்றும் என்றும் ரணில் விக்கிரமசிங்க பரப்புரை செய்துவரும் நிலையில் அநுர இதனைத் தெரிவித்துள்ளார்.

## வாக்குச்சீட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதி தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

தபால் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

தபால்மூல வாக்குச்சீட்டுக்களில் 96 சதவீதமானவை பாதுகாப்பான முறையில் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மிகுதியை இவ்விரு நாட்களுக்குள் ஒப்படைப்போம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்களை விநியோகித்தல் 84 சதவீதம் நிறைவடைந்துள்ளன. வாக்குச்சீட்டு விநியோகம் இன்றுடன் (14) நிறைவடையும். செப்டெம்பர் 3 முதல் வாக்குச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இதுவரை வாக்குச்சீட்டு கிடைக்க பெறாதவர்கள் தமது வசிப்பிட பிரதேசத்தில் உள்ள தபால் நிலையத்துக்கு சென்று தமது விபரங்களை உறுதிப்படுத்தியதன் பின்னர் வாக்குச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ள முடியும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான சகல ஆவணங்களும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. செப்டெம்பர் 21 வாக்களிப்பு நிறைவடைந் தவுடன் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார்.

## புலமைப்பரிசில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3 லட்சத்து 23 ஆயிரத்து 879 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். தமிழ் பிரிவில் 79 ஆயிரம் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் 2 ஆயிரத்து 849 பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. காலை 9 மணிக்கு முன்னர் பரீட்சை நிலையத்திற்கு சமுகமளிக்க வேண்டுமென மாணவ, மாணவிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் நேற்று நள்ளிரவு முதல் பரீட்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

பரீட்சை நிலையத்திற்குள் வெளியாட்கள் பிரவேசிக்க இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்கு தேவையான பேனா, பென்சில் என்பவற்றை மாத்திரமே பரீட்சார்த்திகள் தம்முடன் எடுத்துச் செல்ல முடியும்.

இதேவேளை, கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் நவம்பர் 25 முதல் டிசெம்பர் 20 வரை நடத்தப்படும் எனப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# மாம்பழ உற்பத்தியில் 2ஆம் கட்டம் வெற்றி

## மாணவர்களை பாராட்டிய அதிபர்



(பாறுக் ஷிஹான்)

மாம்பழ அறுவடை இரண்டாம் கட்டமாக வெற்றி பெறுவதற்கு மாணவர்களின் நல்லொழுக்கம் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவமும் தான் காரணம் என கல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ். ஆர். மஜிதிய்யா தெரிவித்தார்.

கல்முனைகமு/கமு/அஸ்-ஸுஹறாவித்தியாலயத்தில் மாம்பழ அறுவடை நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) பாடசாலை அதிபர் அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜிதிய்யா தலைமையில் இரண்டாம் கட்டமாக சிறப்பாக பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற போது மேற்கண்டவாறு அதிபர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ் சஹுதுல் நஜீம் , கௌரவ அதிதியாக வலய கணக்காளர் வை. எம். ஹபிபுல்லாஹ், பாடசாலை ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது சுமார் 100 இற்கும் அதிகமாக மாம்பழங்கள் அறுவடை என்பது மாணவர்களின் நல்லொழுக்கம் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவமும் தான் காரணம் மாணவர்களின் சுற்றாடல் சார் நடவடிக்கைகள் இந்த அறுவடை செயற்பாட்டில் தங்கி இருந்துள்ளன. ஒழுக்கம் உள்ள இடத்தில் தான் காய் கனிகள் பாதுகாப்பாக இருக்கும் என அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜிதிய்யா குறிப்பிட்டார்.

மேலும் இப்பாடசாலையில் கடந்த 04.10.2023 அன்று முதல் கட்ட அறுவடை இடம்பெற்றிருந்ததுடன் இம்முறை இரண்டாம் கட்டத்தில் சுமார் 100 இற்கும் அதிகமாக அறுவடை செய்யப்பட்ட டொம் டேசி மாம்பழ இனங்கள் அதிதிகளால் உத்தியோகபூர்வமாக வெட்டப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(05)

# பொலிஸாரின் உத்தரவை மீறி பயணித்த ஓட்டோ போதைப்பொருளுடன் சிக்கியது

களுத்துறை, அளுத்கம, மொரகல்ல பிரதேசத்தில் பொலிஸ் உத்தரவை மீறி பயணித்த ஓட்டோ ஒன்று போதைப்பொருளுடன் சிக்கியதாக அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர். அதன் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

களுத்துறை, பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய ஓட்டோ சாரதியே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

அளுத்கம, மொரகல்ல பிரதேசத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்றை பொலிஸ் அதிகாரிகள் சிலர் நிறுத்த முயன்ற போது முச்சக்கரவண்டியின் சாரதி பொலிஸாரின் உத்தரவை மீறி தொடர்ந்து ஓட்டோ செலுத்திச் சென்றுள்ளார்.

இதனையடுத்து, பொலிஸ் அதிகாரிகள் சிலர் இந்த ஓட்டோவை துரத்திச் சென்று சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து 10,050 மில்லி கிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அளுத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




# கல்முனையில் பொதுக்கூட்டம்

(எம். எப். றிபாஸ்)

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து கல்முனையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

முன்னாள் மாநகரசபை உறுப்பினர் சட்டத்தரணி ரோஷன் அக்தர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில். நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர், கல்முனை மாநகரசபையின் முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீ.முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளருமான ரஹ்மத் மன்சூர், உயர்பீட உறுப்பினரும், பிரதி பொருளாளருமான ஏ. சீ. யஹீயாகான், ஆகியோர் உரையாற்றுறினர். கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (05)

# ஓட்டோ – பஸ் மோதி விபத்து ; பெண் சாவு

## பாதுக்கையில் சம்பவம்

மீகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாதுக்கை - லியன்வல வீதியில் துத்திரிபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மீகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாதுக்கை பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பஸ் ஒன்று ஓட்டோ ஒன்றின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தின் போது, ஓட்டோ சாரதியும் பின்புறத்தில் அமர்ந்திருந்த பெண் ஒருவரும் படுகாயமடைந்துள்ள நிலையில் பாதுக்கை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதையடுத்து பின்புறத்தில் அமர்ந்திருந்த பெண் மேலதிக சிகிச்சைக்காக ஹோமாகம வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொடை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(05)

## இந்தியாவிற்கு தப்பிக்க

# விமானத்திற்குள் அத்துமீறி நுழைந்த இளைஞன் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தின் காத்திருப்பு பகுதியில் இருந்த விமானமொன்றிற்குள் அத்துமீறி நுழைந்து இந்தியாவிற்கு தப்பிச் செல்ல முயன்ற இளைஞன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகளால் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் வியாழக்கிழமை அதிகாலை 03.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத் திற்குச் சென்று, விமான நிலையத் தின் காத்திருப்பு பகுதியில் இந்தியா வின் சென்னை நகரத்தை நோக்கிப் பயணிக்கவிருந்த விமானமொன்றிற்குள் அத்துமீறி நுழைந்துள்ளார்.

இதனையடுத்து, விமான நிலைய அதிகாரிகள் அனைவரும் இணைந்து சந்தேக நபரை கைது செய்து கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபர் இரு தடவைகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ள நிலையில் இவர் இறுதியாக இந்தியாவின் சென்னை நகரத்திற்கு சென்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வியாழக்கிழமை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(05)

# சுற்றுலாவிகளின் வருகை அதிகரிப்பு



நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 14 லட்சத்தை நெருங்கியுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து செப்டெம்பர் மாதம் 08 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 1,395,773 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப்பயணிகள் பெப்ரவரி மாதத்தில் வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 218,350 ஆகும்.

இந்நிலையில், அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியா, பிரித்தானியா, ரஷ்யா, ஜெர்மனி மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.(05)



# சமத்துவம் நீதிக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் விற்பனைக் கண்காட்சி



கிண்டர்நோத்ஹில்பெநிதியுதவியுடன்சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தால் ஏற்பாட்டில் விற்பனை கண்காட்சி நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

'வலிமையான பெண்களுக்கு வலுவூட்டும் கரங்கள்' எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி பசுமைப்பூங்காவில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமானது.

குறித்த விற்பனை கண்காட்சியினை கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

சுய உதவிக் குழு பெண்களை வலுப்படுத்தும் நோக்கில், சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்தி பொருள்களை சுமார் 40 விற்பனை கூடாரங்கள் அமைத்து காட்சிப்படுத்தியிருந்தனர்.

உள்ளூர் உற்பத்திகளின் தரத்தை மக்கள் மத்தியில் இலகுவாக கொண்டு சென்று உள்ளூர் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்நோக்கில்குறித்தவிற்பனைகண்காட்சி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிவரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05 - 113)

# துரித உணவு வகைகளை உண்பதால் சிறுவர்களுக்கு ஒவ்வாமைப் பாதிப்பு

துரித உணவு வகைகளை உண்பதால் சிறுவர்களுக்கு அடோபிக் எக்ஸிமாஎனப்படும்ஒருவிதஒவ்வாமை நோய் ஏற்படும் என கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் தோல் நோய் வைத்தியர் ஸ்ரீயானி சமரவீர தெரிவித்தார்.

செப்ரெம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள உலக அடோபிக் எக்ஸிமா நோய் தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில், சுமார் முப்பது சதவீத சிறுவர்கள் அடோபிக் எக்ஸிமா எனப்படும் ஒவ்வாமை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த நோயானது மரபணு ரீதியாக பரவக்கூடியது என்பதுடன் ஆஸ்துமா, வயிற்றுப்போக்கு மற்றும் மூக்கு ஒழுகுதல் போன்றவை இந்த நோய்க்கான அறிகுறிகளாகும்.

இந்த நோய் அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் அதிகமாக காணப்படுவதுடன், இளம் பெண்கள் மத்தியிலும் இந்நோய் அபாயம் அதிகம் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

# திருகோணமலைக்கு புதிய நீதிவான் நியமனம்

திருகோணமலைமாவட்டநீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாஅவர்கள்கடந்தவியாழக்கிழமை நீதிச்சேவை ஆணைக்குழுவால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவிஇடைநிறுத்தம்செய்யப்பட்டதைத் தொடர்ந்து கௌரவ ஜனாப் ஃபயாஸ் ரசாக் மாவட்டநீதிபதியாகவும், கௌரவ ஜீவராணிகருப்பையாஅவர்கள்பிரதம நீதிவான் நீதிமன்ற நீதிவானாக வும் இன்று 13.09.2024 மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ அன்னலிங்கம் பிரேம் சங்கர் முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்து கொண்டார்கள்.(05)

# காட்டு யானை தாக்கியதில் பொலிஸ் அலுவலர் காயம்

மிஹிந்தலை - திருகோணமலை வீதியில் மஹாகனதராவ வாவிக்கு அருகில்காட்டுயானைதாக்கிபொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம், உடமலுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 54 வயதுடையபொலிஸ்உத்தியோகத்தர் ஒருவரே காயமடைந்துள்ளார்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர் தனது வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில்கடமைக்குச்சென்றுகொண்டிருக்கும்போது காட்டுயானை தாக்கி காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து,காயமடைந்தவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.09.2024இல் வெளியிடப்பெற்றது